பக்கங்கள்:-28

# காலை முரசு

## உயிரிழந்த சிறுவன் போதை பாவனையில்

(என்.புவியரசன்)

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சிறுவன் போதைப் பொருள் பாவனையில் இருந்தமை உடற்கூற்று ஆய்வில் உறுதி செய்யப்பட்டமையினால் சிறுவனின் உடல் மாதிரிகள் மேலதிக ஆய்விற்காக 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 28 | புதன்கிழமை | 11.02.2026 | அதிர்வு 195

# யாழ். துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்: உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பம்




### வறுமையால் வீதிக்கு வந்த சிறுவனைப் பொலிஸார் கொலை செய்துவிட்டனர் என்று உறவினர்கள் கதறல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 17 வயதுச் சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், உயர்மட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் 06


### இனம் பார்த்து நீர் வழங்குவதில்லை

# கிவுல் ஓயா திட்டத்தை வாக்கு வேட்டைக்காக அரசியலாக்காதீர்கள்!

### அநுர அரசு வேண்டுகோள்

**“கிவுல் ஓயா திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு எவ்வித இனவாத நோக்கமும் கிடையாது. முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட மக்களின் குடிதண்ணீர் மற்றும் விவசாயத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடனேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, இதனை அரசியல் மயப்படுத்தி வாக்குகளைப் பெறுவதற்கு யாரும் முயற்சிக்க வேண்டாம்.”**

**- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.** 06



# சிறுவனின் நெற்றியில் பாய்ந்த தோட்டா மூளையைச் சிதைத்ததாலேயே மரணம்

### உடற்கூற்றுப் பரிசோதனையில் வெளியான திடுக்கிடும் உண்மைகள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த 17 வயதுச் சிறுவனின் உடற்கூற்றுப் பரிசோதனை முடிவுகள் வெளியாகியுள்ளன. துப்பாக்கிச் சன்னம் சிறுவனின் நெற்றியில் பட்டு, தலைக்குள் ஊடுருவி, மூளையைக் கடுமையாகச் சிதைத்தமையே மரணத்துக்கு நேரடிக் காரணம் என மருத்துவ அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 07






மாகாண சபைகளின் வழமையான நடவடிக்கைகளில் மத்திய அரசின் பிரதிநிதிகள் முறையற்ற விதத்தில் தலையிடுவதற்கான ஏற்பாடுகளை – வசதிகளை – வடக்கு ஆளுநர் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து, முறையற்ற விதத்தில் செய்கிறார் என்பதை நேற்று எனது பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

அது குறித்து பல தரப்புகளில் இருந்தும் விசாரணைகள், ஆராய்வுகள், தேடல்கள் தொடங்கி இருக்கின்றன எனத் தெரிகின்றது.

மாகாண சபை விடயங்களில் அதிகம் பரிச்சயம் உள்ள அரசியல்வாதி ஒருவர் பேசினார். மாகாண சபை விவகாரங்களில் மத்திய அரசுக்கோ, மத்திய அரசின் அரசியல் பிரதிநிதிகளுக்கோ நேரடியாகத் தலையிடுவதற்கான எந்த இடமும் இல்லை, ஆக இணைப்புக் குழுக் கூட்டங்களில் மட்டுமே அவர்கள் இணைப்பு நடவடிக்கைகளுக்காகப் பங்கு பற்ற முடியும் என்பதுதான் சட்டம் மற்றும் ஒழுக்கக் கோவைகளின் படி சாத்தியமானது என்றார் அவர். 06

## வலயக் கல்வி அலுவலகத்தில் இலஞ்சம்:

# அதிரடி சுற்றிவளைப்பில் சிக்கிய இரு அதிகாரிகள்

### அம்பாறையில் பரபரப்பு




அம்பாறை, தெஹியத்தகண்டிய வலயக் கல்வி அலுவலகத்தில் பணி புரியும் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் ஆலோசகர் ஆகியோர் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணையத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹியத்தகண்டிய பகுதியைச் சேர்ந்த ஒருவர் அளித்த புகாரைத் தொடர்ந்து, சந்தேகநபர்கள் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணையத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புகார்தாரர் சேவையை விட்டு வெளியேறிய பிறகு, அவரை மீண்டும் பணியில் சேர்த்து, கல்வி அமைச்சின் மூலம் தெஹியத்தகண்டிய வலயக் கல்வி அலுவலகத்தில் அவரது இணைப்பை நீட்டிக்க, சந்தேகநபர்கள் 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் கேட்டுள்ளனர்.

தெஹியத்தகண்டிய வலயக் கல்வி அலுவலகத்தில், இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் அதிகாரிகளால் நேற்று பிற்பகல் இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தெஹியத்தகண்டிய நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப் படவுள்ளனர்.



# யாழ். மருதனார்மடம் சந்தைக்குள் துப்பாக்கியுடன் உலாவிய நபர் கைது!

### அது போலித் துப்பாக்கி எனப் பொலிஸார் தகவல்

*(எஸ்.நிதர்ஷன்)*

யாழ். மருதனார்மடம் பொதுச் சந்தைக்குள் துப்பாக்கியுடன் நுழைந்து பரபரப்பை ஏற்படுத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வைத்திருந்தது போலித் துப்பாக்கி என்றும், ஆரம்பகட்ட விசாரணைகளின்படி அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

நேற்று செவ்வாய்க்கிழமை மருதனார்மடம் சந்தைக்கு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர், தலைக்கவசம் மற்றும் கையுறைகளை அணிந்திருந்தோடு, கையில் ஒரு பையையும் வைத்திருந்தார்.

அங்குள்ள வியாபாரி ஒருவரிடம் பச்சை மிளகாய் கொள்வனவு செய்த அந்த நபர், "சந்தைக்குள் வட்டிக்குப் பணம் வழங்குபவர்கள் யார்?" என வினவியுள்ளார். வியாபாரி தனக்குத் தெரியாது எனப் பதிலளித்ததும் அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

அந்த நபரின் பையினுள் ரி - 56 ரக துப்பாக்கி போன்ற ஒன்று காணப்பட்டதாலும், இடுப்புப் பகுதியில் கைத்துப்பாக்கி போன்ற ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததாலும் அச்சமடைந்த வியாபாரிகள் உடனடியாகச் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், அங்கிருந்த கண்காணிப்புக் கமரா பதிவுகளை ஆய்வு செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் அடிப்படையில் சந்தேகநபரை அடையாளம் கண்டு கைது செய்த பொலிஸார், அவரிடமிருந்த துப்பாக்கியையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கியைச் சோதனை செய்தபோது அது உண்மையான துப்பாக்கி அல்ல என்பதும், போலித் துப்பாக்கியைப் பயன்படுத்தி அவர் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளதமையும் கண்டறியப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர் மனநலம்பாதிக்கப்பட்டவர் எனத் தெரியவந்துள்ள நிலையில், சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ராஜபக்ஷக்கள் தலைமையில் பிரம்மாண்டக் கூட்டணியாம்

## தேர்தலைச் சந்திக்க மொட்டுக் கட்சி தயாராம்

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தில் மிக விரைவில் பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஒன்று உருவாக்கப்படும் என்று அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக, கடந்த 75 ஆண்டு கால அரசியலைச் சாபம் என்று விமர்சித்தது. ஆனால், இன்று ஜனாதிபதி அதே 75 ஆண்டுகால அரசியல் செயலொழுங்கையே பின்பற்றிச் செல்கின்றார். எம் மீதும் ராஜபக்ஷக்கள் மீதும் கடந்த காலங்களில் அடுக்கடுக்கான போலிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றை இன்று சட்டத்தின் முன் நிரூபிக்க முடியாமல் அரசு திணறுகின்றது.” – என்றார்.

சாட்சியங்கள் அழிக்கப்பட்டுள்ளதால் விசாரணைகளில் தாமதம் ஏற்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் கூறுவதைச் சுட்டிக்காட்டிய சஞ்ஜீவ எதிரிமான்ன, “விசாரணைகளை அமைச்சரவையா முன்னெடுக்கின்றது?” எனக் கேள்வி எழுப்பினார்.

“எம் மீது வீண்பழி சுமத்துவதை விடுத்து, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்.” – என்றும் அவர் அரசை வலியுறுத்தினார்.தற்போது கட்சி என்ற அடிப்படையில் தாம் பலமாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் இணக்கமாகச் செயற்பட்டு வருவதாகவும், விரைவில் அமையவுள்ள புதிய கூட்டணியின்



ஊடாகவே எதிர்வரும் தேசிய தேர்தல்களை எதிர்கொள்ளவுள்ளதாகவும் அறிவித்தார்.

மேலும், நாட்டை நிர்வகிக்க முடியாவிடின் தேர்தலை நடத்துமாறும் அவர் அரசுக்குச் சவால் விடுத்தார்.




# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுத் திட்டம்: ஜனாதிபதி தலைமையில் இன்று நுவரெலியாவில்!

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான ;முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசியச் செயற்பாட்டின் மத்திய மாகாண நிகழ்ச்சித் திட்டம், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு நுவரெலியா நகரில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரதான சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாகப் போதைப்பொருள் அச்சுறுத்தல் அடையாளம் காணப்பட்டுள்ளது. அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்த ஒரு விரிவான விழிப்புணர்வு பொறிமுறையின் ஊடாக, மக்களைப் போதைப் பிடியிலிருந்து விடுவித்து, அவர்களைச் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அதிக பங்களிப்பு வழங்கிய 62 பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இதன்போது நடைபெறவுள்ளது.

மத்திய மாகாணத்தில் போதைப் பொருள் ஒழிப்பை ஒரு மக்கள் இயக்கமாக முன்னெடுப்பதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மன்னாரில் அமைச்சர் பிமல் தலைமையில் நேற்று விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம்

## இளவன்குளம் ஊடாக புத்தளத்திற்கான வீதியைத் திறக்கக் கோரிக்கை















**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்ட போக்குவரத்து நெடுஞ்சாலை மற்றும் உள்ளூராட்சி அபிவிருத்தி விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் ஒருங்கமைப்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், சத்தியலிங்கம். ரவிகரன், ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் நகர சபை, மன்னார். நானாட்டான், மாந்தை மேற்கு, முசலி ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்ற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் வீதிகள் புனர்நிர்மாண வேலைகள், போக்குவரத்து, நகர அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பான விடயங்கள் உரிய திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டன.

மேலும் மன்னாரில் இருந்து முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இளவன்குளம் ஊடாக புத்தளத்திற்கு செல்லும் பிரதான வீதியைத் திறந்து மக்களின் பாவனைக்கு விடுமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியவை வருமாறு:–

மன்னார் மாவட்டத்தில், போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்புடைய ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

எதிர்வரும் காலத்தில், இந்தப் போக்குவரத்துஒருங்கிணைப்புகுழுகூட்டம்குறைந்தது ஒன்றரை மாதத்திற்கு ஒருமுறையாவது தொடர்ந்து கூடும் என நாங்கள் பெரும் நம்பிக்கை கொள்கிறோம்.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், நகர சபைத் தலைவர், இடைக்கால நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

எமது அமைச்சரவை சார்ந்த பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன் மூலம், ஒரு அளவிற்கு தீர்வுகளைப் பெற முடிந்ததாக நாங்கள் கருதுகிறோம்.

இந்த அரசியல் தலைவர்களும் நிர்வாக தலைவர்களும் திட்டமிட்டுள்ள வகையில் இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த எங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

# முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் 6 மாத கால அவகாசம் தருகிறோம்

## அநுர அரசுக்கு சஜித் அணி பகிரங்க சவால்



"அநுர அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. அவர்கள் நினைத்தால் அடுத்த வாரமே நாடாளுமன்றத்தில் பிரேரணையை நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும். அரசுக்கு ஆறு மாத கால அவகாசம் வழங்குகின்றோம், முடிந்தால் தேர்தலை நடத்துங்கள்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க சவால் விடுத்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், அரசின் தற்போதைய செயற்பாடுகள் குறித்துக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.


அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. அரசின் இயலாமையும் பலவீனமும் நாளுக்கு நாள் வெளிப்பட்டு வருகின்றன. ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும், சகல கூட்டுறவுத் தேர்தல்களிலும் அரசு தோல்வியைத் தழுவியுள்ளது. இதன் மூலம் மக்கள் அரசின் மீது கொண்டுள்ள வெறுப்பு தெளிவாகப் புலனாகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு ஆறு மாத கால அவகாசத்தை வழங்குகின்றோம். அரசிடம் தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருப்பதால், வரும் வாரமே ஒரு பிரேரணையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து சட்டச் சிக்கல்களை நீக்கித் தேர்தலை நடத்த முடியும். ஆனால், தேர்தலைச் சந்திக்க அரசுக்குத் துணிவில்லை.

இந்த அரசால் நாட்டைச் சரியான முறையில் நிர்வகிக்க முடியாது என்பது உறுதியாகிவிட்டது. எம்மிடம் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த தரப்பினர் உள்ளனர். அதிகாரத்தை எம்மிடம் ஒப்படைத்தால் நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்புவோம். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் ஐக்கிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெறுவது உறுதி." – என்றார்.

# தண்டவாளத்தைக் கடந்த போது விபரீதம்: ரயிலில் மோதி வயோதிபர் பரிதாபச் சாவு!



ரயிலில் மோதி வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

காலி, அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதம்பாகம பகுதியில் உள்ள ரயில் பாதையைக் கடந்த போது ரயிலில் மோதி மேற்படி வயோதிபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் அம்பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய வயோதிபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ்.துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பின்போதுஎழுப்பப்பட்டகேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை வீதியில், அல்லைப்பிட்டி சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸார், சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த ஹயஸ் ரக வாகனம் ஒன்றை நிறுத்துமாறு கட்டளையிட்டுள்ளனர். எனினும், அவ்வாகனம் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்ததால் துப்பாக்கிப் பிரயோகம் முன்னெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் விளக்குகையில்,

“வாகனத்தை நோக்கி நேரடியாகத் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு முன்னதாக, வானத்தை நோக்கிப் பலமுறை எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. அந்த எச்சரிக்கையையும் மீறி வாகனம் பயணித்ததாலேயே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.” – என்றார்.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸாரும், யாழ். மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவினரும் இணைந்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இந்தச் சம்பவத்தில் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த அல்பினோ அருள் பயாஸ் (17 வயது) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நிலையில்மீட்கப்பட்டஅவர்,யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் சித்தி இச்சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், “குடும்பக் கஷ்டம் காரணமாகவே எனது பெறாமகன் சிறு வயதிலேயே வேலைக்குச் சென்றார். சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத போதிலும் அவர் வாகனம் ஓட்டுவதைத் தொழிலாகக் கொண்டிருந்தார். இன்று அதிகாலை ஆட்களை வேலைக்கு ஏற்றுவதற்காகச் சென்ற போதே இந்த அநியாயம் நடந்துள்ளது.” – என்று கண்ணீர்மல்கத் தெரிவித்தார்.

பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்றமைக்காக 17 வயதுச் சிறுவன் சுட்டுக்கொல்லப்பட்ட இந்தச் சம்பவம் பெரும் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

## கிவுல் ஓயா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட மக்களின் நீண்டகால நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாகவே கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இது தற்போதைய அரசால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. கடந்த 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அப்போதைய அமைச்சரவையால் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மகாவலி “எல்” வலயத்துக்கு உட்பட்ட இந்தத் திட்டத்தை 4 ஆண்டுகளுக்குள் நிறைவு செய்ய அப்போது திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் இது பாதியில் கைவிடப்பட்டது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் அத்தியாவசியமானது என அடையாளம் காணப்பட்ட ஒரு திட்டத்தையே நாம் தற்போது மீள ஆரம்பிக்கின்றோம்.” – என்றார்.

இந்தத் திட்டத்தின் தற்போதைய நிதி நிலைமை குறித்து விளக்கிய அமைச்சர்,

“2011ஆம் ஆண்டு இந்தத் திட்டத்துக்காக 4 ஆயிரத்து 170 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், தற்போதைய நிலையில் இதன் செலவு 23 ஆயிரத்து 456 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

ஆரம்ப மதிப்பீட்டை விட 6 மடங்கு செலவு அதிகரித்துள்ள போதிலும், மக்களின் நலன் கருதி தேசிய நிதியத்தின் ஊடாக 2026 முதல் 2031ஆம் ஆண்டுக்குள் இதனை நிறைவு செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இனத்தை அடிப்படையாகக் கொண்டு எவருக்கும் நீர் வழங்கப்படுவதில்லை. எனவே, இதனை அரசியல் மயப்படுத்தி வாக்குகளைப் பெறுவதற்கு யாரும் முயற்சிக்க வேண்டாம். மக்களின் அத்தியாவசியத் தேவையை உணர்ந்து முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்தில் அரசுக்கு வேறு எந்த உள் நோக்கமும் கிடையாது.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபையின் உள் நடவடிக்கைக் கூட்டங்களுக்கு மத்திய அரசின் அரசியல் தலைவர்கள் பிரசன்னம் கூடக் கொடுக்க முடியாது என்பது அவரது நிலைப்பாடாகும். இது குறித்து சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாய்ப்புகள் பற்றி அவர் ஆராய்கின்றார் எனத் தெரிகின்றது.

வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சு தொடர்பான ஆராய்வுக் கூட்டம் நேற்று ஆளுநர் தலைமையில் நடைபெற்றது. ஆளுநருக்கு அடுத்த நிலையில் அந்த மாகாண அமைச்சுக்குப் பொறுப்பானவர் போல நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ஸ்ரீ பவானந்தராஜா அமர்ந்திருந்தார். அதனை உறுதிப்படுத்துவதற்கான படத்தை இத்துடன் இணைத்து உள்ளேன்.

மாகாண சபையின் உள் கூட்டம் ஒன்றில் மத்திய அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அந்தப் பதவி நிலையின் அடிப்படையில் பங்கு பற்றுவதற்கு இடமே இல்லை என்று குறிப்பிட்ட மேற்படி அரசியல்வாதி, இது தொடர்பில் பகிரங்க அறிக்கை வெளியிடவும், நிலைமையைத் தெளிவுபடுத்தவும், தேவைப்பட்டால் சட்ட நடவடிக்கையை நாடவும் விடயங்களைக் கையாளத் தொடங்கியிருக்கின்றார் என அறிந்து கொண்டேன்.

வடக்கு ஆளுநர் தமக்கு கீழ் உள்ள மாகாண அமைச்சின் சுகாதார அமைச்சு விவகாரத்தை ஆளும் தரப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜாவிடம் ஒப்படைத்துள்ளார் என்பதையும் நேற்றுக் குறிப்பிட்டு இருந்தேன்.

ஆக, மாகாண சுகாதார அமைச்சின் கூட்டத்தில் வடக்கு ஆளுநரால் மாகாண சுகாதார அமைச்சர் என்ற தோரணையில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய தொனியை நீங்கள் படத்தில் காண முடியும்.

இந்தக் கூட்டத்தில் ஆளுநர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

எமது பத்திரிகையையோ அல்லது எனது பத்திச் செய்தியையோ அவர் குறிப்பிடாவிட்டாலும், “பத்திரிகை தவறான கருத்தைப் பிரசுரிக்கின்றது. எனது நோக்கம் அபிவிருத்தியே அன்றி அரசியல் அல்ல” என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

நான் நேற்று எனது அரசியல் பத்தியில் ஆளுநர் அரசியல் செய்கின்றார் என்றோ அல்லது தமது அரசியல் நோக்கத்தைச் செயற்படுத்துகின்றார் என்றோ குறிப்பிடவில்லை. அவர் (ஆளுநர்) ஆட்சியாளர்களின் அழுத்தத்திற்கு கட்டுப்பட்டு முறையற்ற வேலைகளை செய்கின்றார் என்ற கருத்தையே வலியுறுத்தி இருந்தேன். இப்போதும் இன்றும் அதையே சொல்லுகின்றேன். ஆளுநர் அரசியல் செய்யவில்லை, ஆனால் அரசியல் அழுத்தத்திற்கு முறையற்ற விதத்தில் அடி பணிந்து தவறான விடயங்களைச் செய்கின்றார் என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



## உயிரிழந்த சிறுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன எனத் தெரிய வந்தது.

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸார் மறித்த வாகனம் நிறுத்தாமல் சென்றதன் காரணமாக பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது 17 வயதுடைய ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் உடற்கூற்றுப் பரிசோதனையின்போது கரோஜின் பாவனை காணப்படுவதனால் அது தொடர்பான மேலதிக ஆய்வு மற்றும் உறுதிப்பாட்டு அறிக்கைகளிற்காக உடல் மாதிரிகள் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன வைத்தியசாலைத் தரப்புக்கள் தகவல் தெரிவித்தன.

இதேநேரம் உயிரிழந்தவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய இருவரையும் மருத்துவ பரிசோதன்சிக்கு உட்படுத்திய சமயம் அவர்களில் ஒருவர் ஐஸ் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலைத் தரப்புகள் தெரிவிக்கின்றன.

## சிறுவனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த அல்பினோ அருள் பயாஸ் (17 வயது) என்ற சிறுவன், நேற்று அதிகாலை அல்லைப் பிட்டி பகுதியில் பயணித்த போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற "ஹயஸ்" ரக வாகனத்தை நோக்கிப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே இந்தச் சோகமான சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்த சிறுவனின் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில், சட்ட வைத்திய அதிகாரி எம். மயூரதன் முன்னிலையில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பின்வரும் அதிர்ச்சித் தகவல்கள் தெரியவந்துள்ளன.

பொலிஸார் சுட்ட துப்பாக்கித் தோட்டா சிறுவனின் நெற்றிப் பகுதியில் பாய்ந்துள்ளது.

நெற்றியைத் துளைத்துக் கொண்டு தலைக்குள் ஊடுருவிய அந்தத் தோட்டா, மூளையைக் கடுமையாகச் சிதைத்துள்ளது.

இந்தப் பாரிய காயத்தின் காரணமாகவே சிறுவன் உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பதவி விலக வேண்டுமா?

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராக லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதற்காக அவர் பதவி விலக வேண்டிய அவசியமில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் நிஹால் அபேசிங்க தெரிவித்திருக்கின்றார்.

அரசமைப்புக் கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகர், இந்த விசாரணையைக் கருத்தில் கொண்டு பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சியினர் விடுத்து வரும் கோரிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டை எவரும் சுமத்தலாம், அதற்காக பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை. விசாரணை நடத்தப்பட்டு அதன் முடிவு வெளியாகிய பின்னர் தான் எந்த தீர்மானமும் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அவரது இந்தக் கருத்து தவறானதாகும். சபாநாயகருக்கு எதிரான குற்றச்சாட்டின் தீவிரத்தை பொறுத்தே இந்த விடயம் முடிவு செய்யப்பட வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னர்தான் பதவி விலக வேண்டும் என்றால், அவருக்கு எதிரான மோசமான குற்றச் சாட்டுக்களை அவர் பதவியில் இருக்கும் போது விசாரிப்பது நெருக்கடியானதாக இருக்கும். குற்றச்சாட்டு மிக மோசமாக இருந்தால் - அந்த அந்தக் குற்றச்சாட்டை விசாரிப்பதற்கான அடிப்படைகள் தாராளமாக இருந்தால் - நீதி, நியாயமான விசாரணை நடைபெறுவதற்கு வசதியாக சபாநாயகர் பதவி விலகுவதுதான் முறையானதாக இருக்கும்.

சபாநாயகருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நாடாளுமன்றப் பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன, தற்போதைய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராக ஆணைக்குழுவில் வழங்கிய முறைப்பாட்டில், அவருக்கு எதிராக எட்டுக் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இரண்டு பதவிகளுக்கான எரிபொருள் கொடுப்பனவுகளை சட்டவிரோதமாக ஒரே சமயத்தில் பெறுதல், உத்தியோகபூர்வ வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்துதல், நாடாளுமன்ற ஊடக உபகரணங்களை தவறாகப் பயன்படுத்துதல், உரிய கட்டணங்களைச் செலுத்தாமல் நாடாளுமன்றத்திலிருந்து உணவு பெறுதல், சட்டவிரோதமாக ஒரு விசாரணை அதிகாரியை நியமித்தமை, நாடாளுமன்ற நிதியிலிருந்து பணம் செலுத்தி நாடாளுமன்றத்தின் செலவில் அவருக்கு உணவு பெறுதல், இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்களைத் தவறாகப் பயன்படுத்துதல், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை வெளியிடுவதைத் தடுத்தல் மற்றும் நாடாளுமன்ற ஊழியர்களின் நிர்வாகத்தில் சட்டவிரோதமாகத் தலையிடுதல் ஆகியவையே அவையாகும்.

இவற்றில் மோசமான குற்றச்சாட்டுகளும் அடங்கியிருக்கின்றமையால் நீதியான விசாரணைகளுக்கு இடமும் வாய்ப்பும் அளிக்கும் விதத்தில் விசாரணைக் காலத்தில் சபாநாயகர் தம் பதவிப் பொறுப்பிலிருந்து விலகியிருப்பதுதான் நல்லது. நேர்மையானது.

# மக்களுக்கான விடயங்களில் ஒன்றிணைந்து பணியாற்ற நாம் தயாராகவே இருக்கின்றோம்

## வவுனியாவில் சத்தியலிங்கம் எம்.பி. அமைச்சர் பிமலிடம் தெரிவிப்பு









மக்களுக்கு நன்மைபயக்கும் விடயங்களில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம் என வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றின் போது அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சத்தியலிங்கம் தெரிவித்திருக்கின்றார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் விசேட மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்றுவவுனியாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கா மற்றும் கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள், உயரதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் மாவட்டத்தின் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் மற்றும் துறைசார் திணைக்களத்தின் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். அவர் தெரிவித்தவ்சி வருமாறு:–

வவுனியாவில் 6 இடங்களில் வீதி சமிக்ஞை விளக்குகள் பொருத்த அமைச்சரிடம் திட்ட முன்மொழிவொன்றை சமர்ப்பித்திருந்தேன். அதற்கான அனுமதி வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அண்மையில் இடம்பெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் சில இடங்களில், குறிப்பாக வைத்தியசாலை சுற்றுவட்டம், மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டம், பள்ளிவாசல் சந்தி ஆகிய இடங்களில் உடனடியாக அவற்றினை அமைப்பது சாத்தியமில்லை எனவும் வீதி அகலப்படுத்தல் செய்த பின்னரே அவற்றை செய்யமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வருட ஒதுக்கீட்டில் எ9 பாதையின் 176 ஆம் மைல் தொடக்கம் 179 ஆம் மைல் வரை வீதி அகலப்படுத்தல் மேற்கொள்ளப்படவிருப்பதால் இரு இடங்களிலும் வீதி சமிக்ஞை விளக்குகளைப் பொருத்தக் கூடியதாக இருக்கும். தற்போது வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்னால் பொருத்தப்பட்டுள்ள வீதி சமிக்ஞை விளக்கு பொருத்தமற்றதாக உள்ளதால் அந்த இடத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பண்டாரவன்னியன் சதுக்க சந்தியிலும் குருமண்காடு சந்தியிலும் வீதி சமிக்ஞை விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றி.

வவுனியா நகரில் காணப்படும் வடிகால்கள் பெரும்பாலும் குப்பைகள் நிறைந்து நீர் வழிந்தோடமுடியாது காணப்படுகின்றன. யார் இதனைத் துப்பரவு செய்வது என்பதே இச்சிக்கலுக்குக் காரணமாகும். இது நீண்டகாலமாக காணப்படும் பிரச்சினை. தயவுசெய்து இன்று இதற்கு ஒரு தீர்வு தாருங்கள். – எனக் கேட்டார்.

இதனையடுத்து நீண்ட வாதப்பிரதிவாதங்களின் பின்னர், இதற்கு பதிலளித்த அமைச்சர் இந்த வடிகால்களை துப்பரவு செய்யும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரியதெனவும், அவற்றை திருத்தம் செய்யும் பொறுப்பு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குரியதெனவும் தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தில் கற்கும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பலர் அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கின்றனர். தினமும் நடந்தே அவர்கள் பல்கலைக்கழகம் வருகின்றார்கள். ஆகவே அவர்கள் பாதுகாப்பான முறையில் பயணம் செய்வதற்காக பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள பகுதியில் நடைபாதை அமைக்க வேண்டியுள்ளது. அவ்வாறு அமைக்கும் பட்சத்தில் விபத்துக்களையும் குறைக்க முடியும். இது தொடர்பில் அதிக கரிசனை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என மருத்துவர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இந்த விடயம் தொடர்பில் உயர்கல்வி அமைச்சுடனும் பேசி நிதியொதுக்கீடு மேற்கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் பல இடங்களில் பாதுகாப்பற்ற ரயிக் கடவைகள் காணப்படுகின்றன. அங்கே காணப்படும் சமிக்ஞை விளக்குகள் பழுதடைந்து காணப்படுகின்றன. ஒழுங்காக வேலை செய்வதில்லை. பல இடங்களில் வீதியை மறிக்கும் கதவுகளும் இல்லை. குறிப்பாக தாண்டிக்குளம் சந்தியில் காணப்படும் கடவையில் உள்ள சமிக்ஞை விளக்கு ரயிக் வராத பல நேரங்களில்கூட ஒலி, ஒளி எழுப்பும் பிரச்சினையும் காணப்படுகின்றது. ஆகவே நீண்டகாலமாக நிலவும் இதுபோன்ற பாதுகாப்பற்ற ரயிக் கடவைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார் அவர்.

விசேட தேவைக்குட்பட்டவர்கள் தமக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள அதற்கான மருத்துவ அறிக்கையினை பெறுவதற்கு மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதுதொடர்பில் நிலையான மற்றும் இலகுவான திட்டமொன்று வகுக்கப்பட்டு அவர்கள் மருத்துவ அறிக்கை பெறுகின்ற விடயம் இலகுபடுத்தப்பட வேண்டும் என்றார் சத்தியலிங்கம்.

49 சி.சி. மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் அவற்றை பதிவுசெய்து உரிமமும் பெறமுடியாத நிலையில் உள்ளனர். அவர்கள் உரிமம்பெற ஆவன செய்யப்படல் வேண்டும் எனக் கோரினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் அவ்வாறான மோட்டார் சைக்கிள்கள் சட்டத்திற்கு புறம்பான முறையில் உதிரிப்பாகங்களாகக் கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டன எனவும் அம்மோட்டார் சைக்கிள்களுக்கு உரிமம் பெறமுடியாதெனவும் தெரிவித்தார்.




# குடமுருட்டிப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நேற்றைய கூட்டத்தில் ரவிகரன் வலியுறுத்து



**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி கூழாங்குளம் வீதியில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலத்தை நிர்மாணிக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா மாவட்டசெயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடமே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

அதனையடுத்து அந்தப் பாலம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் விளக்கங்கோரியிருந்தார்.

19 மீற்றர் நீளமான இந்தஜ் குடமுருட்டிப் பாலத்தை அமைப்பதற்கு ஏறத்தாழ 80 மில்லியன் ரூபா அளவில் நிதி தேவைப்படுமென வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் கே.கௌசிகன் பதில் வழங்கினார்.

மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந்துள்ள இந்தப் பாலம் சீரின்றிக் காணப்படுவதால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பலத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர் எனவும், தொடர்ச்சியாக ஒவ்வொரு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் குடமுருட்டிப் பாலத்தை அமைப்பதற்கு கோரிக்கை முன்வைக்கப்படுகின்ற போதும் அந்தப் பாலத்தை அமைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் ரவிகரன் தெரிவித்தார்.

எனவே குறித்த குடமுருட்டிப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இச்சமயத்தில் அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் அவர் வலியுறுத்தினார்.

ரவிகரனின் கோரிக்கை தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதன்போது பதிலளித்தார்.

இதனையடுத்து வடமாகாண பிரதம செயலாளர் திருமதி.தனுஜா முருகேசன் கருத்துத் தெரிவிக்கையில் –

இவ்வாண்டிற்கான மாகாணக்குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இந்தக் குடமுருட்டிப் பாலத்தௌ அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமெனத் தெரிவித்தார்.

அதற்காக வடமாகாண பிரதம செயலாளருக்கும், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது நன்றிகளைத் தெரிவித்ததார்.

மேலும் இந்தொ பாலத்தின் நிர்மாணம் தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளராலும் இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# மீனவர்களின் போராட்டத்தால் சந்தையில் மீன் விலை உயர்வு

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட விஞ்ச் இயந்திரங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் கரைவலை மீன்பிடித் தொழிலுக்கு அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்கக் கோரி மீனவர்கள் முன்னெடுத்து வரும் சத்தியாகிரகப் போராட்டம் காரணமாக, சந்தையில் மீன்களின் விலையில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை குறித்து மீன் வியாபாரிகள் தெரிவிக்கையில் –

சந்தைக்கு வரும் மீன்களின் அளவு குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக மொத்த மற்றும் சில்லறை விலைகள் ஓரளவு உயர்ந்துள்ளன என்றனர்.

நேற்று பேலியகொடை மீன் சந்தையில் தோரா மீன் 3,600 ரூபாவுக்கும், பாறை மீன் 3,000 ரூபாவுக்கும், கெலவல்லா மீன் 2,700 ரூபாவுக்கும், பலயா மீன் 2,000 ரூபாவுக்கும், லின்னா மீன் 900 ரூபாவுக்கும் சாளையா மீன் 700 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்களின் இந்தப் போராட்டம் மேலும் நீடித்தால், வரும் நாள்களில் மீன்களின் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# பரகஹதெனியவில் ஹெல்மெட் தயாரிக்கும் தொழிற்சாலை தீயில் முற்றாக எரிந்து நாசம்

(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல், பரகஹதெனிய பிரதேசத்தில் உள்ள தலைக்கவசம் (Helmet) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் நேற்றுத் திடீர் தீப்பரவல் ஏற்பட்டது.

இந்தத் தீ பரவலால் தொழிற்சாலை முழுமையாக அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.







# இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினருடன் களுத்துறை வாழ் மலையகத் தமிழர்கள் சந்திப்பு!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு (VOPP) மற்றும் ஐபென் (IPEN) நிறுவனத்தின் அழைப்பின் பெயரில் கடந்த சனிக்கிழமை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினர் முதல் தடவையாக களுத்துறை மாவட்ட மலையகத் தமிழர்களை சந்தித்து நேரடியாகக் கலந்துரையாடினர்.

ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா, பேராசிரியர் டி. தனராஜ், ஆணைக்குழுவின் வெளிவிவகாரப் பணிப்பாளர் திரு. எம்.கபிலன், அலுவலர்களான ஜனாப் யாசீர், திருமதி.நிரோஷினி திஸநாயக்க, சட்ட அலுவலர் திருமதி பாத்திமா பர்ஹா மற்றும் உபக்குழு உறுப்பினர் ஜீவரத்தினம் சுரேஷ் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இச்சந்திப்பு மத்துகம பிரதேசக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குனர் கலந்துரையாடலை வழிநடத்தி முன்மொழிவுகளை முன்வைத்தார். அதே வேளை பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் திட்ட இயக்குனர் லவீனா ஹஸந்தி, மாவட்ட இணைப்பாளர் கே.யோகசுஜி, ஐபென் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் அன்டனி மற்றும் ஆசிரியர் ஆலோசகர் திருமதி. நந்தகௌவரி, விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

களுத்துறை மலையகத் தமிழர்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டுவரும் அடிப்படை மனித உரிமை மீறல்கள், பெருந்தோட்ட கம்பனிகளின் அத்துமீறல்கள் மற்றும் சமகால சமூக பிரச்சினைகள் குறித்தும் நேரடியாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மலையக மக்கள் சார்பில் தொழிலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது களுத்துறை மலையக மக்கள் முகம் கொடுக்கின்ற காணி மற்றும் வீட்டு பிரச்சினை, குறிப்பாக 1994ம் ஆண்டுக்குப் பிறகு மலையக மக்களின் சிலருக்கு வழங்கப்பட்ட 7 பேர்ச்சஸ் நிலங்களுக்கு இதுவரை எந்தவித ஆவணங்களும் வழங்கப்படாமை, இதுவரை சொந்த முகவரி இல்லாமை, கல்விப் பிரச்சினை, அடிப்படை வசதிகள், பெண்கள் முகம்கொடுக்கின்ற தொழில் மற்றும் அதுசார்ந்த பிரச்சினைகள், அடிப்படை வசதிகள் பிரச்சினை உட்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து பங்குபற்றுநர்கள் மிகத் தெளிவாகவும், உணர்வுபூர்வமாகவும் எடுத்துரைத்தனர். இதை செவிமடுத்துக்கொண்டிருந்த ஆணையாளர்கள் அவை தொடர்பில் மிகுந்த கவலை தெரிவித்தனர்.

மக்கள் முன் வைத்த பிரச்சினைகளை கேட்டறிந்த ஆணையாளர்கள் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து பேசுவார்கள் எனவும், பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எடுப்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அனுப்புவார்கள் எனவும் உறுதியளித்தனர்.















# இலங்கையை பாராட்டினார் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர்

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பஹீம் உல் அஜீஸ் , இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை நேற்று சந்தித்தார்.

இலங்கையிலான அவரது பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில், இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது, இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர் தொடர்பாகப் பாகிஸ்தான் எடுத்திருந்த தீர்மானத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் பங்கேற்பதில்லை என பாகிஸ்தான் முன்னதாக எடுத்திருந்த முடிவைக் கைவிட்டுள்ளது.

இலங்கையுடன் முன்னெடுக்கப்பட்ட 3 நாள் இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளின் பலனாக, கருத்து வேறுபாடுகளைக் களைந்து இப்போட்டியில் பங்கேற்க பாகிஸ்தான் உடன்பட்டுள்ளது.

இந்த சிக்கலைத் தீர்ப்பதில் இலங்கை ஆற்றிய ஆக்கபூர்வமான மத்தியஸ்தப் பணிகளை உயர்ஸ்தானிகர் வெகுவாகப் பாராட்டினார்.

உலகக் கிண்ணப் போட்டிகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகளை தீர்க்க அமைச்சர் விஜித ஹேரத் தொடர்ச்சியாக மேற்கொண்ட இராஜதந்திர முயற்சிகளுக்கு உயர்ஸ்தானிகர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளின் போது பாக்கிஸ்தான் உயர்ஸ்தானிகர் வழங்கிய உடனடி மற்றும் நேர்மறையான பதிலுக்காக அமைச்சர் விஜித ஹேரத் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கையிலான தனது பதவிக் காலம்மகிழ்ச்சிகரமானதாகவும்வெற்றிகரமானதாகவும் அமைந்ததாகக் குறிப்பிட்ட உயர்ஸ்தானிகர், இதற்கு வெளிவிவகார அமைச்சு வழங்கிய ஒத்துழைப்பை நினைவுகூர்ந்தார்.

மேலும், தனது பதவிக்காலத்தில் 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் 2 ஜனநாயக ரீதியிலான தேர்தல்கள் சிறப்பாக நடத்தப்பட்டன என அவர் சுட்டிக்காட்டினார்.







# குஜராத் முதலமைச்சரை சந்தித்தார் ரில்வின் சில்வா

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா, குஜராத் மாநில முதல்வர் ஸ்ரீ பூபேந்திர ரஜினிகாந்த் படேலை சந்தித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் தொழில், சுற்றுலா மற்றும் ஆடை போன்ற தொழில் அபிவிருத்திகள் தொடர்பில் ஒத்துழைப்புடன் செயற்படுவது குறித்த கருத்துகளும் இதன்போது பரிமாறப்பட்டன.



# இந்தியாவிலிருந்து இலங்கை செல்வதற்கான விமானக் கட்டணங்கள் கிடுகிடுவென உயர்வு!

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கான விமான டிக்கெட்டுகளின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரி 20 உலக கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்திய – பாகிஸ்தான் தொடரில் பாகிஸ்தான் அணி பங்கேற்க பாகிஸ்தான் அரசு அனுமதித்த பிறகு இது நிகழ்ந்துள்ளது.

இந்தியாவில் இருந்து கொழும்பு செல்லும் விமான டிக்கெட் விலைகள் – குறிப்பாக இந்தியாவில் இருந்து கொழும்புக்கு செல்லும் விமானங்களுக்கான டிக்கெட் விலைகள் சராசரி விலையை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.




இதற்கிடையில், மும்பை, டெல்லி மற்றும் சென்னை போன்ற நகரங்களிலிருந்து கொழும்புக்கு வரும் அனைத்து வகை பயணிகளுக்கான நேரடி விமானங்களின் டிக்கெட் விலைகளும் சராசரி அளவை விட அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ரி 20 உலகக் கோப்பை இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெறுகிறது. இதன் கீழ், 20 அணிகள் 4 குழுக்களாக போட்டியிடும், மேலும் பரம எதிரிகளான இந்தியா மற்றும் பாகிஸ்தான் குழு “ஏ” இல் போட்டியிடுகின்றன.

இருப்பினும், இரு நாடுகளுக்கும் இடையிலான சமீபத்திய போட்டி காரணமாக இலங்கையில் நடைபெறவிருக்கும் இந்தியா – பாகிஸ்தான் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை என்று பாகிஸ்தான் சமீபத்தில் அறிவித்தது. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

மேலும் விளையாட்டுத் துறை, தொலைக்காட்சி ஒளிபரப்புத் துறைகள் மற்றும் வணிகத் துறையில் இது குறித்து நிறைய பேச்சுக்கள் எழுந்தன.



# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 1,750 ரூபா கிடைத்தது

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட நாளாந்த சம்பளம் நேற்று பெருமளவான பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கமைய, அடிப்படை சம்பளம் ஆயிரத்து 550 ரூபாவும், வருகைக் கொடுப்பனவு 200 ரூபாவும் அடங்கலாக ஜனவரி மாதத்துக்கான நாளாந்த சம்பளமாக ஆயிரத்து 750 ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயிரத்து 550 ரூபா, சம்பள பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதுடன், வருகை கொடுப்பனவான 200 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகரிக்கப்பட்ட சம்பளம் தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் அரசாங்கத்துக்கு இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேற்படி ஒப்பந்த விடயங்களை வெளிப்படுத்துமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.


# நீபா வைரஸ் பரவல் தொடர்பில் இலங்கையில் கடும் அவதானம்

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் நீபா வைரஸ் பரவல் குறித்து இலங்கை சுகாதாரப் பிரிவினர் விசேட அவதானத்துடன் செயற்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், விமான நிலையங்களை மையப்படுத்தி அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவில் நீபா வைரஸ் பரவல் மற்றும் மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில், எதிர்வரும் இந்தியா – பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைக் காண அதி



களவான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்பதால் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 4 நாள்களில் மட்டும் 40,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

ஜனவரி மாதத்தில் மட்டும் 277,000 பயணிகள் வருகை தந்துள்ளனர். இது ஒரு சாதனை அளவாகும்.

எனவே, பயணிகளின் வருகை அதிகரித்துள்ள சூழலில் சுகாதார அமைச்சு எதற்கும் தயாராக உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.







# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெறுவதில் இலங்கை ஆர்வம்

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியுடன் அமைச்சர் விஜித ஹேரத் சந்திப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்காற்றி வரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை, தற்போதைய கால எல்லை நிறைவடைந்த பின்னர் மீளப் பெற்றுக்கொள்வதில் இலங்கை கொண்டுள்ள ஆர்வத்தை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பதில் முகாமைத்துவ பணிப்பாளர் பவுலா பம்பலோனி தலைமையிலான உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், இணையவழி பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் காணாமல் போனோர் அலுவலகம் உள்ளிட்ட சுயாதீன நிறுவனங்களை வலுப்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்தை முன்னெடுத்தல் போன்ற அரசின் சட்ட சீர்திருத்தங்கள் குறித்து அமைச்சர் விபரங்களை முன்வைத்தார்.

மேலும், டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இக்கட்டான காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஆதரவிற்கும் அமைச்சர் விஜித ஹேரத் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இருதரப்பு விவகாரங்களுக்கு அப்பால், உலகளாவிய அரசியல்-பொருளாதார மாற்றங்கள் மற்றும் பிராந்திய சவால்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் பன்முகத்தன்மை கொண்ட சர்வதேச பொறிமுறைகளுக்கு மதிப்பளித்து, பரஸ்பர மரியாதை மற்றும் பகிரப்பட்ட விழுமியங்களின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவை மேலும் வலுப்படுத்த இரு தரப்பும் இதன்போது இணக்கம் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து வழங்குவதற்கான தகுதிகளை மதிப்பீடு செய்வதற்காக, ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த உயர்மட்டத் தூதுக்குழு இலங்கையை வந்தடைந்துள்ளது.

நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள இலங்கை - ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக்குழுவின் 27 ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக இந்த மதிப்பீட்டுச் செயல்முறை முன்னெடுக்கப் படுகின்றது.









# இலங்கையில் முதன்முறையாக பஸ்களில் பெண் நடத்துனர்கள்

இலங்கை போக்குவரத்து சபையின் வரலாற்றில் முதல் முறையாக நியமிக்கப்பட்ட பெண் நடத்துனர்கள் நேற்று உத்தியோகப்பூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இந்த பெண் நடத்துனர்கள் கொட்டாவை, மாகும்புர பன்முக போக்குவரத்து மையத்தில் இருந்து தமது பணிகளை ஆரம்பித்தனர்.

அண்மையில் இலங்கை போக்குவரத்து சபையினால் 19 பெண்கள் நடத்துனர்களாக நியமிக்கப்பட்டனர்.

அரச போக்குவரத்து துறையில் பெண்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்றமை இதுவே முதல் முறையாகும்.

போக்குவரத்துத் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும், பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தில், குறிப்பாக பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் பரந்த முயற்சியின் ஒரு அங்கமாக இந்த நியமனங்கள் பார்க்கப்படுகின்றன.

# பாடசாலைகளில் நிதி சேகரிக்க சட்டபூர்வமான அனுமதி இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் விளக்கம்




தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் பாடசாலைகளில் நிதி சேகரிப்பதற்கு எந்தவிதமான சட்டபூர்வமான அனுமதியும் வழங்கப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாடசாலைகளில் பல்வேறு செயற்பாடுகளுக்காக மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி சேகரிக்கப்படும் நடைமுறை நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. ஆனால், தற்போதைய நிலையில் இவ்வாறான நிதி சேகரிப்புகளுக்கு அனுமதி இல்லை.

நிதி வழங்கக் கோரி சில குழுக்கள் அல்லது தனிநபர்கள் மேற்கொள்ளும் அழுத்தங்களால் மாணவர்கள் அசௌகரியத்திற்கு உள்ளானால், மாணவர்களின் நலன் கருதி அதில் தலையிடும் அதிகாரம் கல்வி அமைச்சுக்கு உண்டு.

பாடசாலைகளுக்கு ஆதரவளிக்க விரும்பும் பெற்றோர் அல்லது பழைய மாணவர் குழுக்கள் தன்னிச்சையாக வழங்கும் பங்களிப்புகளைத் தடுக்க முடியாது.

இருப்பினும், இதுவரை இது தொடர்பாக அமைச்சுக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை." என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அனைத்துப் பாடசாலைகளுக்கும் "ஸ்மார்ட் போர்டுகள் கட்டாயமானவை அல்ல என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெளிவுபடுத்தியுள்ளார்.

"புதிய கல்வி மறுசீரமைப்புகள் பாடசாலைகளில் தற்போதுள்ள வசதிகளைக் கொண்டே நடைமுறைப்படுத்தப்பட முடியும். செய்முறைப் பயிற்சி மற்றும் செயற்பாடுகளை மையமாகக் கொண்ட கற்றல் முறைகளுக்கே புதிய சீர்திருத்தங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது."என்றும் அவர் தெரிவித்துள்ளார்.






# மயிலிட்டி கண்ணகி அம்மன் ஆலய இராஜ கோபுர கட்டுமானம் ஆரம்பம்

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய புதிய இராஜ கோபுர கட்டுமானத் திற்கான நாள் வேலை கடந்த ஞாயிற் றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

முற்றிலும் பொழி கல்லினால் அமைக் கப்பட்டிருக்கும் இராஜ கோபுரத்தின் கீழ்த் தள பகுதியை உள்ளடக்கியதாக புதிய இராஜ கோபுரமானது பஞ்ச தளங்களை கொண்டதாக அமைக்கப்பட உள்ளது. இதையடுத்து சிறப்பு பூஜை வழிபாடு இடம் பெற்று சுப வேளையில் நாள் வேலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டியை சேர்ந்த பிரபல வர்த் தகர் அமரர் கே.வி.துரைச்சாமி – யோக லட்சு தம்பதியினரால் 1970 ஆம் ஆண்டு அமைத்துக்கொடுக்கப்பட்ட இந்த ஆலயத்தின் இராஜ கோபுரமா னது அவர்களது குடும்பத்தினரது நிதிப் பங்களிப்பில் பஞ்ச தளங்களை கொண் டதாக புதிதாக அமைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.














# கொழும்பில் கோலாகலமாக நடைபெற்ற 'பாட்டு பாடவா' பக்திப் பாடல் போட்டி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், இலங்கையில் ஐயப்ப வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதன் 50 ஆவது ஆண்டு பொன்விழாவினை முன்னிட்டும், இலங்கையிலிருந்து முதன் முதலில் சபரிமலை யாத்திரையை ஆரம் பித்த மறைந்த ஆதிகுரு க.ரவீந்திர குமார் குருசாமியை நினைவு கூரும் வகையிலும் "பாட்டு பாடவா" பக்திப் பாடல் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள ஸ்ரீகல் யாண முருகன் மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ். விஜேராஜ் இன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் இறுதிச் சுற்றுப் போட்டி யில் 08 போட்டியாளர்கள் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி னர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட் டியில் முதலாம் இடத்தினை ஹட்டனைச் சேர்ந்த தினுஷிகா பெற்றுக்கொண்டார்.

இரண்டாம் இடத்தினை வத்தளை யைச் சேர்ந்த கவி பிரசாந்த் மற்றும் மூன்றாம் இடத்தினை கொட்டகலை யைச் சேர்ந்த குமார் தனுஷ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பணப் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டதோடு, ஏனைய போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், சிறுவர்களுக்காக நடத் தப்பட்ட விசேட போட்டியில் வெற்றி பெற்ற மூன்று சிறுவர்களுக்கும் வெற்றிக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட் டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் களாக கொழும்பு கலாசார அதிகார சபை யின் தலைவர் சிந்திக்க பத்திரன, முன் னாள் தலைவர் சந்தன விஜேமான்ன, முன்னாள் செயலாளர் திமித்ரா ஆகி யோர் கலந்துகொண்டனர்.

மேலும், சிறப்பு அதிதிகளாக பந்தள ராஜன் நற்பணி மன்ற யாத்திரை குழு மோகன் குருசாமி, ஷேடோ லைன் நிறு வனத்தின் உரிமையாளர் திரு. மகாலிங் கம், கொழும்பு 13 கதிரேசன் வீதி ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத் தின் பிரதம சிவாச்சாரியார் விஜியா னந்தன் குருசாமி, ஸ்ரீசக்தி சபரி யாத் திரை குழு சிவசுப்பிரமணியம் குருசாமி, அவிசாவளை மகேஸ்வரன் குருசாமி, கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தின் அறங்காவலர் கனக ரகுநாதன் ஐயா, அட்டன் ரிஷி செந்தில் குருசாமி மற்றும் ராஜேந்திரன் குருசாமி உள்ளிட்ட பல ஆன்மீகப் பெரியோர்களும் முக்கியஸ்தர் களும் கலந்துகொண்டு சிறப்பித்த னர்.

நிகழ்வின் ஒரு பகுதியாக கலை மற்றும் சமூகத் துறைகளில் பங்காற்றிய ஊடகவியலாளர்கள், சமூகச் செயற்பாட் டாளர்கள் மற்றும் கலைஞர்கள் எனப் பலரும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

மேலும், இதன்போது ஊடகவிய லாளர் சந்திரகாசன் ஞான பிரசாந்தன் ஊடகத்தினூடாக கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக "ஊடகச் செம்மல்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.













# காணாமல் ஆக்கப்பட்ட நம் உறவுகளுக்காக ஒற்றுமையுடன் தொடர்ந்தும் போராடுவோம்!

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் உறுதி







(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

உரிமைகளுக்காகப் போராடியவர்களுக்கு பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டது. உண்மையிலேயே அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் உணர்வுடன் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளப் போராடியவர்கள். எனவே வடக்கு, கிழக்கில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் ஒற்றுமையுடன் எமது உறவுகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம் என வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் சிவாநந்தன் ஜெனிற்றா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கப் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகத்தில் தலைவராக மீண்டும் உதயச்சந்திரா தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக லுஸ்ரின் மோகன்ராஜ். உப தலைவராக திருமதி ரஞ்சினி, உப செயலாளராக வேணி, பொருளாளராக இமாக்குலேற் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்கள் 8 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே செயலாளர் சிவாநந்தன் ஜெனிற்றா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2009 ஆம் ஆண்டு எமது உறவுகளை கையில் ஒப்படைக்கப்பட்டும், சரணடைந்தும், இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் வைத்தும் கடத்திச் செல்லப்பட்டும் இருந்தனர். அந்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இந்த இலங்கை நாட்டில், அரசுகள் ஆட்சிக்கு வந்து கொண்டு இருக்கின்ற போதும், இந்த ஒரு விடயத்துக்குத் தீர்வும் கிடைக்காமல், நாங்கள் இன்று 16 வருடங்களைக் கடந்து தொடர்ந்தும் எம் உறவுகளுக்காக போராடி வருகின்றோம்.

எமது உறவுகள் எங்கே என்று கேட்டு தொடர்ச்சியாக போராடி வருகிறோம். ஆனால் அந்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்று பதில் கூற முடியாத அரசு அவர்களை நம்பி சரணடைந்த அல்லது கையில் ஒப்படைத்த எமது உறவுகளை என்ன செய்தார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் பொய் பிரசாரங்களை முன்னெடுத்து எமது மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது. தற்போது போராட்டக்குழுவில் இருந்து வந்துள்ள அநுர அரசும் இன்று போலி நாடகம் ஆடி வருகிறது. அநுர அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வலி தெரியும் என்று கூறி இருந்தனர்.

ஆனால் அவர் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ள போதும் எந்த ஒரு தீர்வும் எட்டப்படாத நிலையில் இராணுவத்தைக் காட்டிக் கொடுக்காமல் உள்ளார்.

எமது உறவுகளை அழித்ததே இந்த இராணுவம்தான். ஒரு நாட்டில் இரண்டு இனம் வாழ்கின்ற போது ஓர் இனத்தை அழித்து, மற்றைய இனம் தெற்கிலே வெற்றி விழா கொண்டாடியுள்ளது.

நாங்கள் இந்த நாட்டிலே மனிதர்களாக வாழ்வதற்கு உரிமை இல்லையா. நாமும் ஒரு தேசிய இனம். 30 வருடங்களாக எமது இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எமது உரிமைகள் அப்போது மறுக்கப்பட்டிருந்தன. எமது உரிமைகளுக்காக அவர்கள் போராடியவர்கள்.

உரிமைகளுக்காக போராடியவர்களுக்கு பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டது. உண்மையிலேயே அவர்கள் பயங்கரவாதிகள் அலர்.அவர்கள் சம்பளத்துக்கு வேலைக்குச் செல்லவில்லை.அவர்கள் உணர்வுடன் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளப் போராடியவர்கள்.

எனவே வடக்கு கிழக்கில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் ஒற்றுமையுடன் எமது உறவுகளுக்காகத் தொடர்ந்து போராடுவோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் ஐ.ம.ச., தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் பாடசாலைக்கு செல்லவில்லை எனத் தோன்றுகிறது

## கற்றறிந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கா கண்டுபிடிப்பு








**(கி.வசந்தன்)**

வவுனியாவில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழரசுக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் பாடசாலைக்கு செல்லவில்லையோ எனத் தோன்றுகிறது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று கூமாங்குளம் அலகரை வீதியைப் புனரமைப்பதற்கான வேலைச்சி ஆரம்பித்து வைத்த பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாங்கள் தேர்தலிற்காக வீதியைச் செய்து தரவில்லை. மாறாக மக்களின் போக்குவரத்திற்காகவே செய்து தரவுள்ளோம். நாம் கிராமிய வீதி அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளோம்.

இவ்வமைப்புக்கி சம்பந்தப்பட்ட வீதி உரிய முறையில் மேற்கொள்ளப்படு கின்றதா என்பதை பார்வையிடுவதே பிரதான பணியாக இருக்கும். எனவே இக்கிராமத்திலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்குபடுத்தலில் விரைவாக அவ்வமைப்பை உருவாக்கவும்.

மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட வீதிகளையே நாம் அமைக்கின்றோம். முப்பது வருடம் யுத்தத்திலே பாதிப்படைந்த மக்கள் என்ற ரீதியில் வடமாகாணத்திற்கு ஜனாதிபதி அதிகளவான நிதியை ஒதுக்கியுள்ளளார்.

டித்வா புயலின் காரணமாக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள முடியாது என்ற காரணத்தை நாம் கூறியிருக்கலாம். ஏழை எளிய மக்களிற்கு உதவி செய்வதற்காகவே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசை அமைத்துள்ளோம்.

மேலும் நாம் வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக செய்து வருகின்றோம். திருட்டு, கொள்ளை, மோசடிகளை இல்லாது ஒழிப்பதாக அரசியல் ரீதியாக தெரிவித்திருந்தோம். இவ்வாறான மோசடிகளில் நூறு வீதம் அரசோ, அரச அமைச்சர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ ஈடுபடவில்லை. இருந்தாலும் கூட எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் பல போலியான குற்றச்சாட்டுக்களை தெரிவிக்கின்றார்.

இது தொடர்பாக எங்களுக்கு எதிராக வழக்கோ அல்லது பிரேரணையோ கொண்டு வாருங்கள் எனத் தெரிவித்தோம். ஆனால் எதையும் அவர் செய்யவில்லை. குறிப்பாக நாடாளுமன்றத்தில் கூறும் பொய்களிற்கு நாம் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

நாம் மோசடி மற்றும் வீண் விரயத்தை இல்லாது ஒழிப்போம். குறிப்பாக கடந்த காலங்களில் ஒரு நிகழ்விற்கு அதிகளவான செலவு மேற்கொள்ளப்படும். ஆனால் நாம் அவ்வாறான செலவுகளை குறைத்து மிச்சப்படுத்தியுள்ளோம்.

மேலும் கடந்த காலங்களில் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களது உறவுகள் அனைவருக்கும் வேலையை பெற்றுக்கொடுப்பார்கள். ஆனால் நாங்கள் அவ்வாறு வழங்கவில்லை. கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ் ஒப்பந்த வேலைகளை மேற்கொண்டனர்.

இவ் வீதியானது 550 லட்சம் ரூபாவுக்கு மதிப்பீடு செய்து கேள்வி கோரல் பத்திரம் தாக்கல் செய்திருந்தோம். அந்த ஒப்பந்தத்தை 385 லட்சம் ரூபாவுக்கு ஓர் ஒப்பந்தகாரர் எடுத்துள்ளார். இதன் மூலமாக 165 லட்சம் ரூபாவை மிச்சப்படுத்தியுள்ளோம். மொட்டுக்கட்சி அரசோ அல்லது வேறு அரசாங்கமாக இருந்திருந்தால் இந்த 165 லட்சம் ரூபாவும் பைகளிற்குள் சென்றிருக்கும்.

இதேபோன்று வடக்கு மாகாண சபையிலும் பெரிய மாற்றமென்பதற்கு இல்லை. குறிப்பாக கடந்த மாகாண சபையில் இரு அமைச்சர்களை வடமாகாண முதலமைச்சர் நீக்கியிருந்தார். இனவாதம் இல்லாத அரசை உருவாக்குவோம் என ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார். நீங்கள் தமிழர் என்பதால் இந்த அரசினால் அநீதி இழைக்கப்பட்டு உள்ளதா என கேட்கிறேன்.

பல வருட காலமாக இந்நாட்டிலே பிரச்சினை ஒன்று இருக்கின்றது என்று எங்களுக்கு தெரியும். அதனை தீர்த்து வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. பெரும்பாலான பிரச்சினைகள் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என்ற ரீதியில் இல்லை.

குறிப்பாக பணம் இருந்தால் மூவினத்தவர்களும் சந்தோசமாக உள்ள

தொடர்ச்சி ▼

# வவுனியாவில் ஐ.ம.ச., தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் பாடசாலைக்கு செல்லவில்லை என தோன்றுகிறது









தொடர்ச்சி ▲

னர். ஆனால் பணம் இல்லை எனின் இது கஷ்டமாகும். வாக்குறி வழங்கிய விடயங்களை ஒவ்வொன்றாக அரசாங்கம் என்ற ரீதியில் மேற்கொள்ள வேண்டும்.

கல்வி சீர்திருத்தம் தொடர்பாக தெரிவித்திருந்தோம். அதனை தற்போது ஆரம்பித்துள்ளோம். இங்குள்ள ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலைக்கு செல்லவில்லையோ எனத் தோன்றுகிறது. குறிப்பாக தமிழரசுக் கட்சியில் ஒருவரே அப்படி இருக்கின்றார், மற்றவர்கள் கொஞ்சம் பரவாயில்லை.

நாம் மேற்கொண்ட கல்வி சீர்திருத்த விடயத்தில் இவர்கள் மேற்கொண்ட செயலினால் தரம் 06 இற்கான வகுப்பினை இவ்வருடம் ஆரம்பிக்க முடியாமல் போய்விட்டது. இருந்த போதும் நாம் கல்வி சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஆரம்பித்தோம். நாம் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் அரசினை அமைத்துள்ளோம்.

கடந்த நாட்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் போராட்டம் இடம்பெற்றது. இந்நிலையில் ஜனாதிபதிக்கும் அவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது அவர்களை ஆசிரியர்களாக உற்வாங்குவதற்கான பிரமாணத்தின் அடிப்படையில் ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

வடமாகணததிலே படையினர் மற்றும் அரசின் கீழ் உள்ள காணிகளை தேவையின் அடிப்படையில் பாதுகாப்பு படையினரின் சம்மதத்துடன் மீளவும் பொது மக்களுக்கு வழங்கவுள்ளோம். 60 மாதங்கள் பணியாற்றுவதற்காக எமது அரசாங்கம் அமைக்கப்பட்டுளளது. கடந்த காலங்களிலே அரசாங்கங்கள் வழங்கிய நிதியை விட தற்போது டித்வா சூறாவளியால பாதிக்கப்பட்ட மக்களிற்கு பெருமளவான நிதியினை வழங்கியுள்ளோம். குறிப்பாக எமது அரசாங்கத்தினால் பணத்தினை மிதப்படுத்தியமையாலே வழங்க முடிந்தது.

மேலும் வறுமைக்குட்பட்ட மக்களின் தன்மையை அறிந்து கொள்ளக்கூடிய ஜனாதிபதி இருப்பதனால் இது நடந்தது. குறிப்பாக டித்வா புயலில் அழிவடைந்த வீடுகளிற்கு ஐம்பது லட்சம் ரூபாவை வழங்கவுள்ளார் என்பதை எங்களால் கூட நம்ப முடியாது இருந்தது.

ஒரு வீடு மட்டும் உள்ளவர்களின் வீடுகள் அழிவடையும் போது அவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்று எங்களிற்கு புரியும். இது வவுனியாவில் ஒரு வீடு, கொழும்பில் ஒரு வீடு மற்றும் இலண்டனில் ஒரு வீடு இருப்பவர்களிற்கு தெரியாது. இதன் காரணமாகவே அழிவடைந்த வீட்டிற்கு ஐம்பது லட்சம் ரூபாவும், அதற்கு மேலேயும் வழங்குவதற்கு தீர்மானித்தோம்.

மேலும் டித்வா சூறாவளி காலத்திலேயே சம்பளத்தையும் அதிகரித்திருந்தோம். அத்தோடு மலையக தொழ்லாளர்களுக்கு 200 ரூபா அரசாங்கம் வழங்கியதன் ஊடாகவே 1700 ரூபா வேதனம் வழங்கப்படவுள்ளது. குறிப்பாக எங்களுடைய நாட்டை நாங்கள் தான் கட்டியெழுப்ப முடியும். மாறாக வேறு யாரும் அதனை செய்ய முடியாது. இலங்கையை கட்டியெழுப்ப யாருமே பெரிய அளவில் உதவி செய்ய போவதில்லை.

சில நாடுகள் குறிப்பிட்டளவு நிதியை வழங்கிய போதும் முழு நாட்டையும் கட்டியெழுப்ப அது போதுமானதாக இருக்காது. நீங்கள் அனைவரும் இணைந்து 75 வருடகால மோசடியான அரசை இல்லாது செய்துள்ளீர்கள். அத்தோடு நான்கு திசையை உள்ளடக்கிய நல்ல கட்டமைப்பை கொண்ட அரசாங்கத்தை உருவாக்கியுள்ளீர்கள்.

அதிகளவான மக்கள் எங்கள் அரசின் மீது ஆர்வமாக உள்ளனர். ஆனால் இவ் அரசை யார் எதிர்க்கின்றனர். குறிப்பாக கடந்த காலத்தை போல் சௌகரியமாக இருக்க முடியாத ராஜபக்ஷக்கள், ஐக்கிய மக்கள் சக்தியினரே. குறிப்பாக ஒரு குடும்பமே ராஜபோக வாழ்க்கை வாழ்ந்தார்கள். அது தற்போது முடியாது உள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியினர் பொய் கூறுவதோடு எங்களையும் பேசுகின்றார்கள். இவ்வாறானவர்களிற்கு உடந்தையாக இருந்த சிறு தொகை அதிகாரிகளும் எதிர்க்கின்றனர். இருந்த போதும் இனவாதம் இல்லாமல் இருக்க வேண்டும் என நினைப்பவர்கள் எமக்கு எதிராக இல்லை.

கொழும்பு, காலியிலும், பருத்தித்துறையிலும் இருந்து வலைப்பந்து விளையாட்டு போல் இனவாத விளையாட்டை விளையாடுவார்கள். இதன் மூலமாக அவர்களிற்கு ஒரு செய்தி உள்ளதுடன், அவர்களிடம் ஏமாந்து வாக்கும் போடப்படும்.

தெற்கில் இனவாதம் இல்லாமல், வடக்கிலும் இனவாதம் இருக்காது. ராஜபக்ஷ சரியான பசியுடன் உள்ளார். அவர்களின் உணவு இல்லை. கம்மன்பில, வீரவன்ஸ ஆகியோருக்கு இனவாத உணவு இல்லாமல் மெலிந்துள்ளனர்.

அமைச்சு பதவி இன்றி வாக்குகள் இன்றி தற்போது இவர்கள் இனவாதம் எங்குள்ளது என தேடுகின்றனர். இவர்களை போன்றவர்களே யாழிலும் உள்ளமையுடன், அவர்களிற்கு அமைச்சு பதவி இல்லாமல் போய்விட்டது. அத்தோடு வடக்கில் உள்ள இவர்களும் இனவாதத்தை தேடி திரிகின்றனர். ஆனால் நாங்கள் அவர்களுக்கு இனவாத உணவை வழங்கப்போவது இல்லை.

அவர்களிற்கு இரண்டை தெரிவதற்கான சந்தர்ப்பம் தற்போது உள்ளது. ஒன்று இனவாதம் இல்லாமல் அப்படியே இல்லாமல் போவது. இரண்டாவது இந்த நாட்டிலே ஒற்றுமையாக ஒன்றாக சேர்ந்து பயணிக்கத்தக்க வகையில் அவர்கள் செய்வதன் மூலம் அவர்கள் தப்பிக்கொள்வார்கள். தற்போது இனவாத செயற்பாட்டை தேடுபவர்கள் இரு பக்கமும் இருந்து குறைக்கின்றனர். - எனத் தெரிவித்தார்.

# இலங்கைக்கு வந்த சோதனை!





துஷான் ஹேமந்த

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நெதர்லாந்து அணிக்கு எதிரான போட்டியின்போது, காயத்துக்குள்ளான இலங்கை அணியின் நட்சத்திர வீரர் வனிந்து ஹசரங்க, தொடரின் எஞ்சிய போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

10ஆவது ரி-20 உலகக் கிண்ணத் தொடர் இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் இலங்கை அணி தனது முதலாவது ஆட்டத்தில் அயர்லாந்துக்கு எதிராக விளையாடி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின் போது இலங்கை அணியின் நட்சத்திர வீரர் வனிந்து ஹசரங்கவுக்கு காயம் ஏற்பட்டது. அவருக்கு ஏற்பட்ட தொடை நரம்புக் காயம் தீவிரமடைந்தமையால், தொடரின் எஞ்சிய போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விலகியுள்ளார். வனிந்து ஹசரங்க விலகியமை இலங்கை அணிக்கு மிகப் பெரிய இழப்பு ஆகும். அவருக்குப் பதிலாக துஷான் ஹேமந்த அணியில் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது.

இலங்கை அணி தனது அடுத்த போட்டியில் ஓமன் அணியை நாளைய தினம் எதிர்கொள்ளவுள்ளது.

இந்தப் போட்டி முற்பகல் 11 மணிக்கு பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரி-20: நேற்றைய போட்டிகளின் முடிவுகள்

**நெதர்லாந்து - நமீபியா**
159/3 156/8
7 விக்கெட்டுகளால் நெதர்லாந்து வெற்றி

**ஐ.அ.இ. - நியூஸிலாந்து**
173/6 175
10 விக்கெட்டுகளால் நியூஸிலாந்து வெற்றி

**பாகிஸ்தான் - ஐ.அமெரிக்கா**
190/9 158/8
32 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றி

## ரி-20 உலகக் கிண்ணம்: அணிகளின் நிலை - 10.02.2026

### குழு - ஏ

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 0.932 |
| 2 | இந்தியா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 0.240 |
| 3 | நெதர்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.356 |
| 4 | நமீபியா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -1.033 |
| 5 | ஐ.அமெரிக்கா | 2 | 0 | 2 | - | - | - | -1.525 |

### குழு - பி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிம்பாப்வே | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.702 |
| 2 | இலங்கை | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1.000 |
| 3 | அயர்லாந்து | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -1.000 |
| 4 | ஓமன் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.702 |
| 5 | ஆஸ்திரேலியா | - | - | - | - | - | - | - |

### குழு - சி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மே.இ.தீவுகள் | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1.750 |
| 2 | ஸ்கொட்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.950 |
| 3 | இங்கிலாந்து | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 0.200 |
| 4 | நேபாளம் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -0.200 |
| 5 | இத்தாலி | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -3.650 |

### குழு - டி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 4 | 1.919 |
| 2 | தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.850 |
| 3 | ஆப்கானிஸ்தான் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -1.62 |
| 4 | ஐ.அ.இராச்சியம் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.763 |
| 5 | கனடா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.850 |

போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, ச-சமனிலை மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி

## உதவித் தொகை உயர்த்துமாறு கோரிக்கை:

# மறியலில் ஈடுபட முயன்ற மாற்றுத் திறனாளிகள் கைது






ஆந்திராவில் வழங்குவதைப் போல, தமிழகத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகையை உயர்த்தி வழங்கக் கோரி, மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையரகம் அருகே வீதியில் மறியலில் ஈடுபட முயன்ற 600 இற்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் கைது செய்யப்பட்டனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகையை உயர்த்தி வழங்கக் கோரி, தமிழக அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில், சென்னையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையரகம் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோ.வில்சன், மாநில பொதுச் செயலாளர் பா.ஜான்சிராணி, ஊனமுற்றோர் உரிமைகளுக்கான தேசிய மேடை செயல் தலைவர் எஸ். நம்புராஜன் உள்ளிட்ட சுமார் 700 பேர் பங்கேற்றனர்.

தொடர்ந்து, கோரிக்கையை வலியுறுத்தி, அவர்கள் காமராஜர் வீதியில் மறியலில் ஈடுபட முயன்றனர். 600 இற்கும் மேற்பட்டவர்களை பொலிஸார் கைது செய்து, கோட்டூர்புரம் ஏரிக்கரை சாலையில் உள்ள வெங்கடேஸ்வரா மண்டபத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு போதிய வசதி இல்லாததால், அங்கிருந்து எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்துக்கு அழைத்து சென்றனர்.

தமிழகம் முழுவதும் உதவித் தொகையை உயர்த்தி வழங்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

# நயினார் நாகேந்திரன் உடன் பனிப்போர் எதுவும் இல்லை

## அண்ணாமலை தெரிவிப்பு

நயினார் நாகேந்திரனுக்கும், எனக்கும் எந்த பனிப்போரும் இல்லை என்று பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

பல்லடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“உலக நாடுகளிடம் எங்கு போட்டி இருக்கிறதோ அங்கு எரிபொருள் வாங்கப்படும் என்று நாட்டின் வெளியுறவுத் துறை செயலர் சொல்லியிருக்கிறார். இதுதான் மத்திய அரசின் பதில். ரஷ்யாவில் இருந்து வாங்குகிறோமோ அல்லது வெனிசுலாவில் இருந்து வாங்குகிறோம் என்று சொல்லவில்லை.

தமிழகத்துக்கு மத்திய அரசு கொடுக்கப்பட்டுள்ளதை பட்ஜெட்டில் பலரும் பட்டியலிட்டுள்ளனர். அதிவேக ரயில்கள், மருந்து, ஜவுளிப் பூங்கா உள்ளிட்டவை தமிழ்நாட்டுக்கும் பொருந்தும். தமிழ்நாடு அரசு பட்ஜெட்போடும்போது, தனித்தனியாக மாவட்டங்களுக்கு போடுவதில்லை. ஒட்டுமொத்தமாகவே போடுகிறார்கள்.

இந்தியாவில் அதிகப்படியான மருத்துவக் கல்லூரி இருக்கும் மாநிலம் தமிழ்நாடுதான். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் தொடர்ந்து வருகிறது. ஆனால் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கட்டிட பணிகளை ஆய்வு செய்யலாமே? அவர் 5 ஆண்டுகளில் எத்தனை முறை மதுரைக்கு சென்றார்? எய்ம்ஸ் பக்கம் அவர் ஏன் போகவில்லை. எய்ம்ஸ் வரவில்லை என்று சொல்வது எளிது. ஆனால், மாநில அரசின் ஒத்துழைப்பின்றி கட்டுவது பெரும் சவால்தான்.

தேசிய ஜனநாயக கூட்டணி மேலும் வலுப்பெறும் வகையில் கூட்டணியில் சில கட்சிகள் சேரும். சிறுபான்மையினருக்கு கொடுக்கப்படும் ஊக்கத் தொகை பா.ஜ.க.அரசுஅதிகரித்துள்ளது.உதயநிதி ஸ்டாலின் பொத்தாம் பொதுவாக அபாண்டமான குற்றச்சாட்டை முன்வைக்கிறார். கடந்த 5 ஆண்டுகளில் சிறுபான்மையினருக்கும், பெரும்பான்மையினருக்கு தி.மு.க. அரசு என்ன செய்துள்ளது?

கேசவ விநாயகம் நல்ல மனிதர். ஆர்.எஸ்.எஸ் சங்கம் அவருக்கு வேறு பொறுப்பு வழங்கியுள்ளது. அவரது பணி சிறப்பாக முடிந்ததற்கு நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துவிட்டு வந்தேன். நயினார் நாகேந்திரனுக்கும், எனக்கும் எந்த பனிப்போரும் இல்லை. கட்சி கொடுக்கும் வேலைகளை செய்து கொண்டிருக்கிறேன்.” – என்றார்.



# காங்கிரஸ் உடனான கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை

## கனிமொழி திட்டவட்டம்



"தி.மு.க. தலைமைக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் இணக்கமான நல்லுறவு உள்ளது. அதனால் கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. வரக்கூடிய தேர்தலில் நிச்சயமாக இணைந்து செயல்படுவோம்."

– இவ்வாறு தி.மு.க எம்.பி கனிமொழி தெரிவித்தார்.

கனிமொழி தலைமையிலான தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ராமநாதபுரத்தில் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்தது. இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி,

"மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மத அமைப்புகளை சேர்ந்த பலரும் எங்களை சந்தித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்துள்ளனர். அவற்றையெல்லாம் பரிசீலித்து திமுக தேர்தல் அறிக்கையில் சேர்ப்போம்.

2021 ஆம் சட்டப்பேரவை தேர்தலுக்கு திமுகவின் தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதில் 400க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம். ஒன்றிய அரசு நமக்கு எதிராக செயல்படுவதால் சில வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலவில்லை. சில வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளன.

இந்த தி.முக ஆட்சியில் மாணவர்கள், பெண்களுக்கு அதிகளவிலான திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். அதனை எங்கள் தேர்தல் பிரச்சாரத்தில் முன்னிலைப்படுத்துவோம். அரசு ஊழியர்கள் உள்ளிட்டோர் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை முதல்வர் கேட்டு பலவற்றை நிறைவேற்றி வருகிறார்.

ஆட்சியில் பங்கு வேண்டும் என சில தனி நபர்கள் பேசுகிறார்கள், அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. தி.மு.க தலைமைக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் இணக்கமான நல்லுறவு உள்ளது. அதனால் கூட்டணிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. வரக்கூடிய தேர்தலில் நிச்சயமாக இணைந்து செயல்படுவோம். காங்கிரஸுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்." – என்றார்.





# பங்களாதேஷ் தயாரிப்பு ஆடைகளுக்கு அமெரிக்கச் சந்தையில் வரி விலக்கு!

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பங்களாதேஷ் ஆடை மற்றும் ஆபரணப் பொருள்களுக்கு வரி விலக்கு அளிப்பதற்கான புதிய ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் பொருள்களுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா 20 வீதத்திலிருந்து 19 வீதமாக குறைத்துள்ளது.

இதன் மூலம் பிராந்தியப் போட்டியாளரான இந்தியாவுக்கு இணையான நிலையை பங்களாதேஷ் எட்டியுள்ளது.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவை வலுப்படுத்துவதோடு, ஒருவருக்கொருவர் சந்தையை அணுகுவதற்கு "முன்னெப்போதும் இல்லாத வாய்ப்பை" வழங்கும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலகளாவிய வர்த்தக பங்காளிகள் மீது விதித்த கடுமையான வரிக் கொள்கைளைத் தொடர்ந்து, வோஷிங்டனுடன் பங்களாதேஷ் நடத்திய நீண்ட பேச்சுவார்த்தைகளின் முடிவாக இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பருத்தி மற்றும் செயற்கை இழை ஆபரங்களை கொண்டு தயாரிக்கப்படும் குறிப்பிட்ட ஆடை வகைகளுக்கு அமெரிக்கா முழு வரி விலக்கு அளிக்கும்.

இதற்கு பதிலாக, அமெரிக்க விவசாய மற்றும் கைத்தொழில் பொருட்களுக்கு பங்களாதேஷ் தனது சந்தையை திறந்து விடும்.

குறிப்பாக அமெரிக்க இரசாயனங்கள், மருத்துவ உபகரணங்கள், வாகன பாகங்கள், சோயா பொருட்கள் மற்றும் இறைச்சி வகைகளுக்கு பங்களாதேஷ் முன்னுரிமை அளிக்கும்.

அமெரிக்காவின் உணவு, மருந்து, வாகனப் பாதுகாப்பு மற்றும் புகை உமிழ்வு விதிகளை பங்களாதேஷ் அங்கீகரிக்கும்.

இதனால் அமெரிக்கப் பொருட்கள் பங்களாதேஷ் சந்தைக்குள் நுழைவது எளிதாகும்.

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் உரிமைகளைப் பேணுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அமெரிக்காவின் விவசாயம், விமானம் மற்றும் எரிசக்தி பொருட்களைக் கொள்முதல் செய்தல் போன்ற நிபந்தனைகளுக்கு வங்கதேசம் உடன்பட்டுள்ளது.

பங்களாதேஷின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 80 வீதத்துக்கும் அதிகமான பங்கினை ஆடைத் தொழில் துறையே வகிக்கிறது.

சுமார் 4 மில்லியன் தொழிலாளர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர்.

சீனாவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய ஆடை ஏற்றுமதியாளராக பங்களாதேஷ் திகழ்கிறது.

2024 இல் ஷேக் ஹசீனாவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து இடைக்கால அரசாங்கத்தின் கீழ் உள்ள பங்களாதேஷ், நாளை வியாழக்கிழமை பொதுத் தேர்தலைச் சந்திக்கவுள்ள நிலையில் இந்த ஒப்பந்தம் முக்கியத்துவம் பெறுகிறது.




# வீதியின் நடுவே அவசரமாக தரையிறங்கிய விமானம்

## வாகனங்கள் மீது மோதி விபத்து

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் சிறிய ரக விமானம் ஒன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாகப் போக்குவரத்து நெரிசல் மிக்க வீதியொன்றில் அவசரமாகத் தரையிறங்கியது.

இந்தச் சம்பவத்தில் பல வாகனங்கள்சேதமடைந்ததுடன்,பொதுமக்கள்காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜோர்ஜியா மாகாணத்தின் கெய்ன்ஸ்வில் பகுதியில் நேற்று  முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறிய ரக விமானம் ஒன்றின் எஞ்சினில் திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அதனைத் திட்டமிட்டபடி விமான நிலையத்தில் தரையிறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, விமானி விமானத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்து, அருகிலிருந்த போக்குவரத்து நெரிசல் மிக்க பிரதான வீதியொன்றில் அவசரமாகத் தரையிறக்கியுள்ளார்.

வீதியில் தரையிறங்கிய போது, கட்டுப்பாட்டை இழந்த விமானம் அங்கிருந்த பல வாகனங்கள் மீது மோதியது.

இதில் வாகனங்களில் பயணித்த பலர் காயமடைந்துள்ளதாகத் தரையிறங்கிய இடத்திற்கு விரைந்த காவல்துறை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

காயமடைந்தவர்கள்  உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்த காணொளிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை விமானப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் முன்னெடுத்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# இன்றைய ராசி பலன்கள் - 11.02.2025




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும். இதனால் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதற்றமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ண வேண்டாம். அது உங்கள் தோலை பாதிக்கும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.02.2025




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதட்டமின்றி இருக்கலாம்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# சட்டத்தை மீறி சுண்டிக்குளத்தில் இடம்பெறும் வீஞ்சுக் கரைவலை



**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் தொடர்ந்து தடை செய்யப்பட்ட வீஞ்சு கரைவலை தொழில் இடம்பெற்றுவருவதாக வடமராட்சி கிழக்கு மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நாடு முழுவதும் வீஞ்சு முறைமையை பாவித்து கரைவலை தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்ட நிலையில் இவ்வாறு தடையை மீறி வடமராட்சி கிழக்கு சுண்டிக்குள பகுதியில் வீஞ்சை பாவித்து கரைவலை தொழில் மேற்கொள்ளப் படுவதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அதிகளவான கரைவலைத் தொழிலாளர்கள் வீஞ்சு முறைமையை நிறுத்தியுள்ள போதும் ஒரு சில கரைவலைத் தொழிலாளர்கள் இவ்வாறு மறைமுகமாக வீஞ்சு முறையை பயன்படுத்துகின்ற்ச்மையாக் ஏனைய கரைவலை தொழிலாளர்கள் உட்பட சிறு தொழிலாளர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர்ழ்

மனிதவலுவை அடிப்படையாக கொண்டுதான் கரைவலை தொழிலை மேற்கொள்ளுமாறு கூறி வீஞ்சு முறையை அரசாங்கம் தடை செய்துள்ள நிலையில் மீண்டும் வீஞ்சுத் தொழிலை அனுமதிக்கக் கோரி கரைவலை தொழிலாளர்களால் நாட்டின் பல பாகங்களில் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.